மாலை மணி

Regd. No. 5458
Phone: 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர் : கே. ஜி. இராதாமணாளன்

மாலை 4 | சென்னை 15-7-54 | மணி 25

ஆலயங்களில் வழிபாடுகள் ஆரியத்தில்

சூதாகப் பிழைப்பு நடத்தும் ஆரிய இனத்தவரல்லவா நாத்திகர்?

தி. க., தி. மு. க., ஏற்காத ஏடுகள், எதிர்காலத்தில் நிலைக்காது!

வள்ளுவர் விழா எடுப்போம்! பகுத்தறிவுப் பண் பாடுவோம்!

மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் பேராசிரியர் அன்பழகன் சொற்பொழிவு

11—7—54 ஞாயிறு பிற்பகல் தொடங்கிய மாநாட்டில் பற்பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆசிரியர்கள் பலர் தீர்மானங்களை முன் பொழிந்து வழிமொழிந்தனர். இறுதியில் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஓர் விரிவுரை நிகழ்த்தினார். அதன் சுருக்கம் இது.

அவைத் தலைவரவர்களே! ஆசிரிய நண்பர்களே! தாய்மார்களே! தோழர்களே!

மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பளித்தமைக்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மாநாட்டினை இவ்வளவு சீரும் சிறப்புமாக நடாத்திய வரவேற்புக்குழுவினருக்கு எனது பாராட்டுதல் உரித்தாகும். இன்று காலையில் தொடங்கிய இம்மாநாட்டினைத் துவக்கி வைத்தவர் நமது அருமைக் கல்வி அமைச்சராவார். அவர் துவக்கிவைத்த மாநாட்டை முடித்துவைக்கும் கட்டத்தில் நிற்கிறேன் நான்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர் சிதம்பரநாதனார் அவர்கள்—பேசுகையில், தமிழாசிரியர்களை நாத்திகர் எனச்சிலா நவில்கிறார்கள் என்றும், ஆனால் அவர்களோ திருக்குறள்பயின்றவாகளாதலின், அதிலுள்ள 'கடவுள் வாழ்த்தை' மறந்தும் அறியார்கள் என்றும், அவர்களது தாய்மொழிப் பற்றை கடவுள் வழிபாடுமுதல், சடங்குகள் வரை எதுவாயினும் தமிழிலேயே நடத்தவேண்டும் என்று அவர்கள் எல்லோரும் ஒருமனதாகக் கொண்டுள்ள தமிழ்பற்றைக்கண்டுதான்—அவ்விதம் குறைபேசுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

மாநாட்டினைத்துவக்கிவைத்த கல்வி அமைச்சரோ, தமிழாசிரியர்களை—நாத்திகர் என்று தாம் எப்பொழுதும் கருதவோ, கூறவோ இல்லை என்றும், அவர்கள் கடவுள் பற்றுடையவர்கள் என்றறியத் தான் மகிழ்வதாகவும் தெரிவித்ததுடன், கடவுள் பற்று இளைஞர்க்கு அவசியம் என்று வலியுறுத்திச் சென்றார்.

அவைத் தலைவர் நாவலர் பாரதியார் அவாகளோ, கடவுள் பற்றை — மக்களுக்கிடையிலே வலியுறுத்த வேண்டிய நிலைகூட ஏற்பட்டுவிட்டதே என்று இரங்கிக்கூறி. தமிழ்ப் படித்தவர்கள், தமிழன் கண்ட 'கடவுளை' அறிவார்கள் என்றும், அவாகளுக் கிடையிலே—ஆத்திக நாத்திக வாதமே எழத் தேவை

இருக்காது எனவும் தெரிவித்தா. வள்ளுவா கண்ட 'கடவுள்'—தமிழா 'கடவுள்' உள்ளத்தையும் கடந்தவா எனவும், அவரைப் பற்றி வெறும் வாதம் ஏன்? என்றும் கேட்டார்.

உண்மையாகவே, பொதுமக்கள் மன்றத்தில் ஒரே ஒரு கட்சியாரை 'நாத்திகா' என்று தூற்றும் நிலைபோய், நாட்டிலே உள்ள தமிழாசிரியர்கள் அனைவரையுமே—'நாத்திகர்' என்று ஐயுறும் நிலை. குறை காணும் நிலை—இங்கு தோன்றியிருப்பதைக் காண்கிறோம்.

புராணக் கருத்துக்களில் மூழ்கியவகளும் பழமைக்குப் பலியானவாகளும், பஜனை மண்டபத்திற்கு ஏற்றவகளுமே—தமிழ்ப் புலமை நடத்திய நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் காண்போர்—நாடு பெற்றுள்ள முன்னேற்றத்தை உணாவா என்று கருதுகிறேன். ஆனால் தமிழாசிரியாகள் எல்லோரும் கூட அல்ல—பெரும்பாலோரேனும் நாத்திகரா? என்று கேட்கிறேன். யாரேனும்—ஒருவர் இருவர் வேறு துறை ஆசிரியர்களிலே உள்ளவர்களைவிடப் பன்மடங்கு குறைவாகத்தான் இருக்கக் கூடும். தமிழ் ஆசிரியர்களிடையே நாத்திகர் ஆனாலும் தூற்றப்படுகின்றனரே ஏன்?

இந்நாட்டைப் பொறுத்தவரையில், 'ஆத்திகம்' ஆரியத்தின் பாதுகாப்பு ஆணை அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழுக்கு உரிமை வேண்டும் தலைமை வேண்டும் என்றகுரல் கிளம்புவதே, 'ஆரியத்தோடு' மோதிக் கொள்ள வேண்டியதாகத்தான் அமைகின்றது.

ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகள் பூஜைகள் ஆரியத்தில் இருப்பானேன்? அதுஎன்ன இந்நாட்டு மக்கள் மொழியா? என்றைக்கேனும் வழங்கிய மொழியா? தமிழ் மொழியிலே வாழ்த்தினால் இறைவன் செவி சாய்க்கவே மாட்டாரா? சாய்த்தாலும் விளங்காது போய்விடுமா? தமிழ் தவிர பிறமொழி இருப்பது என்ன நீதி? என்று கேட்கிறோம் நாம். இதைக்கேட்பதனால்தான் நாத்திகராம் நாம். நம்புகிறார்கள் சிலர்.

இதே கேள்வியை எழுப்பியதால்தான், தில்லைக்கூத்தனைத் திருவலம் செய்யத்தவறாத திருவாளர், கா. சு. பிள்ளை அவர்களை, அவர்கள் எவ்வளவுதான் சைவசித்தாந்தத்திலே ஊறித் திளைத்தவரானாலும், 'நாத்திகர்'

(2ம் பக்கம் பார்க்க)

மாஹியில் உணவுப் பஞ்சம் ஏற்படும்?

மறியலின் எதிரொலி!

பிரெஞ்சு அதிகாரி கூற்று

பாரீஸ், ஜூலை 14—

பிரெஞ்சு மாஹியில், உணவுப் பொருள்கள் இன்னும் சில தினங்களுக்கே போதுமானதாக இருக்குமென நேற்றிரவு பிரெஞ்சு செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

மாஹி, 5,000 மக்களைக் கொண்ட நகரமாகும். ஜூன் 18-ந் தேதி முதல், மாஹீ எல்லையில் மறியல் நடப்பதின் விளைவுதான், உணவுசப்ளை துண்டிக்கப்பட்டது. பருவமழை காரணமாக, கடல் மூலம் உணவுப் பொருள்கள் வருவதற்கும் வழி இல்லை, என்பதாகப் பிரெஞ்சு அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

"தினத்தந்தி" பகிஷ்காரம்

மஜீத் மன்றம் தீர்மானம்

சென்னை ஜூலை 13—

(11—7—54) அன்று மாலை 7 மணி சுமாருக்கு சென்னை மஜீத் மன்ற இல்லத்தில், செயற்குழு கூடி, கீழ்கண்ட, கண்டத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"சமீப காலமாக, முற்போக்கு தினசரி, ஜனநாயக முறையில் இயங்குகிறது, என்றெல்லாம் தம்பட்டம் அடிக்கப்பட்டு, அரசியல் 'கண்யம்' இன்றி, பத்திரிகா தருமத்துக்கு 'இழுக்கு' தேடும் வகையில், மிக மட்டரகமாக நடந்து கொண்டு, நாட்டில் இயங்கும் பல முற்போக்கு அரசியல் கட்சிகளுக்குள், பூசல்களை கிளப்பிவிட்டு, 'ரத்தம் குடிக்கும் நரிவேலை' செய்து தன் வயிறு நிரப்பும், தினத்தந்தியாம், ஜோக்கர் தினவர்த்திகையை, இன்று தேதி முதல், மன்றத்தின் அங்கத்தினர்களும் ஆதரவாளர்களும் வாங்குவதில்லை என்ற கண்டனத்தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது".

மாலைமணி

சென்னை 15—7—54

மூளை காலி!

உத்திர பிரதேசத்திலுள்ள தமது சொந்த ஊரான அலகா பாத்திற்குப் பண்டிதநேரு சென்றிருக்கிறார். அவரது அழகு மாளிகையான ஆனந்த பவனத்தின் எதிரில், சிவப்புக்குல்லாய் அணிந்த இருநூறுக்கு மேற்பட்ட பிரஜா—சோஷலிஸ்டு தொண்டர்கள் கூடி, "எங்கள் தலைவர் லோகியாவை விடுதலை செய்! நீர்ப்பாசன வரி உயர்வை ரத்துசெய்!" என்ற ஒலிகளை எழுப்பினார்கள்.

"இந்தியாவின் ஒளிவிளக்கே! எங்கள் இதயத்தின் ஆனந்த கீதமே! வருக! வருக! சுதந்திர ஜோதியைக் காணச் சுகவாழ்வை தத்தம் செய்த அண்ணலே! அன்னியர் கண்டு அஞ்சும், ஆற்றல் வீரரே! சிறைகண்டு நடுங்காத தீரரே! வருக! வருக!" என்று எந்த மாளிகையின் முன்பு மக்கள் கூடி, குதூகலத்தோடு வரவேற்புத் தருவார்களோ, அதே மாளிகையின் முன்பு இன்று ஏகாதிபத்தியத்தின் உருவமே, எங்கள் தலைவர்களை விடுதலை செய்!" என்ற முழக்கம் எழுகிறது! நிலைமை எவ்வளவு தலைகீழாக மாறிவிட்டது! அன்று சுதந்திர வீரரே என்று போற்றித் துதிபாடிய அதே மக்கள், இன்று சர்வாதிகாரத்தின் சின்னமே என்று இழித்தும் பழித்தும் கூறத் தொடங்கிவிட்டனர்.

சொந்த ஊரிலேயே தனக்கு எதிர்ப்பா என்ற எண்ணம் பண்டிதருக்கு அச்சத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கிவிட்டிருக்கிறது! ஆகவே வழக்கப்படி வசைபுராணத்தை கக்க ஆரம்பித்து விட்டிருக்கிறார்.

"உருப்படியான காரியம் எதையும் செய்யாமல், பிறரைத் திட்டி ஆர்ப்பாட்டம் நடத்தும் பழக்கம் பிரஜா—சோஷலிஸ்டுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது! அவர்களுக்கு மூளை காலி என்பதையே இது காட்டுகிறது!" என்று பண்டிதர் ஆத்திரத்தோடு பேசியிருக்கிறார்.

"கம்யூனிஸ்டுகள் பிற்போக்குவாதிகள் ஆகிவிட்டனர். 90 ஆண்டுகளுக்கு முன்பாக மார்க்ஸ் என்பவர் எழுதிவைத்த கொள்கைகளை அவர்கள் சுயபுத்தி இல்லாமல் பின்பற்றுகிறார்கள்! இந்தியக் கம்யூனிஸ்டுகளோ, மார்க்ஸும் லெனினும் எழுதியதை மனப்பாடம் செய்துவிட்டு, மானவெட்கம் இல்லாமல் ஒப்பித்துக்கொண்டிருக்கிறார்கள்!" என்று பதட்டத்தோடு வார்த்தைகளைச் சிந்தவிட்டிருக்கிறார்.

பிரஜா—சோஷலிஸ்டுகள் பிறரைத் திட்டித் திரியும் கீழ் மக்கள், மூளை காலிப பேர்வழிகள்! கம்யூனிஸ்டுகள் சுயபுத்தியில்லாத, சுய சிந்தனை இல்லாத முட்டாள்கள்! மனப்பாடம் செய்ததை ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளைகள்! மானவெட்கமில்லாத தடித்த தோலர்கள்!—இவை படித்த பண்டிதரின் வாயினின்றும் உதிர்ந்த வசை மொழிகள்—குற்றச்சாட்டுகள்!

பிரஜா—சோஷலிஸ்டு கட்சியினரின் மீதும், கம்யூனிஸ்டு கட்சியினரின் மீதும் பண்டித நேரு அள்ளித் தெளித்திருக்கும் இந்த வார்த்தைகளில், உண்மை இருக்கிறதா இல்லையா என்பதல்ல நமது ஆராய்ச்சி! இப்படிக் கூறலாமா என்பதே நமது கேள்வி! எதிரிகள் என்றால், அவர்களைக் கேவலமாகப் பேசுவதுதான் முறையா? அதுதான் ஒழுங்கா? படிப்பிற்கு அழகா? பண்பிற்கு ஒளியா?

பண்டித நேருவுக்கு வயதாகிறதே அன்றி, அந்த வயதிற்கேற்ற பண்பையும் பக்குவத்தையும் அவர் பெறவில்லையே! உணர்ச்சி வயப்படும் அனுபவமில்லாத வாலிபனைப்போல, வாயில் வந்தபடியெல்லாம் பேசுகிறாரே—இது சரியா? தமக்குப் பிடிக்காத ஆட்கள் என்றால், நாக்கில் நரம்பில்லாமல் ஏசுகிறார்—சாலையில் சுற்றும் சாதாரண மனிதரைப்போல!

ஒரு நாட்டின் பிரதமர் என்றால், ஆளும் ஒரு கட்சியின் தலைவர் என்றால், எவ்வளவு பொறுப்போடும் கண்ணியத்தோடும் பேச வேண்டும்? தமது கட்சியைச் சேர்ந்தவரைவிட, மாற்றுக் கட்சித் தோழர்களுக்கு எத்தகைய மதிப்புத் தரவேண்டும்? இவைகளை, உலகமேதை என்று போற்றப்படும் பண்டித நேரு சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை என்றால், அவரைப் பற்றி எத்தகைய முடிவிற்கு வரவேண்டியிருக்கிறது? அகராதியிலுள்ள எல்லாந்த வார்த்தைகளை, அவருக்கு அன்பளிப்பாக அனுப்பலாம் என்று தோன்றுகிறது?

உலகம் சுற்றிய பண்டிதரே, இந்த உதவாக்கரை போக்கை விட்டுவிடும்! எதிரிகளைக் கேவலமாகப் பேசுவதின் மூலமாகவே அடக்கிவிட முடியும் என்று கனவு காணாதீர்! இது கண்ணியமல்ல! பண்டிதரே தெளிவு பெறுக—திருந்துக! இல்லையேல் அதிவிரைவில் செல்லாக்காசு ஆகிவிடுவீர் என்று எச்சரிக்கை

ஆலயங்களில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தூற்றினர்—நாத்தழும்பேறிய —ஆத்திகப் பட்டதாரிகள். இன்றும்-குன்றக்குடியார் கூறுகிறார் தமிழிலே—வழிபாடு நடைபெறவேண்டும் என்று, ஆனால் அர்ச்சகர்கள் கூடுகிறார்கள், அதைக்கண்டித்துத் தீர்மானிக்கிறார்கள், வடமொழிதான் இறைவனுக்கு ஏற்றமொழி என்று வலியுறுத்துகிறார்கள். இது எதைக் காட்டுகிறது? தமிழ்நாட்டில் — தமிழுக்கு மாறான எதையும் யாரும் வற்புறுத்திக் கொண்டிருக்கலாம்—ஆலயங்களிலே ஆரியம் ஆதிக்கம் செலுத்தலாம் என்பதைத்தானே!

உண்மையில், தமிழாசிரியர்கள் மட்டுமல்ல—நாட்டிலே நடமாடும் சீர்திருத்தவாதிகளான சுயமரியாதைக் காரர்களும் நாத்திகர் அல்ல. திராவிடத்தின் தலைவர், தன்மானத் தந்தை என்று போற்றப்படும் பெரியார் அவர்கள்கூட இது நாள் வரையில் 'கடவுள் இல்லை' என்று வலியுறுத்தும்—நாத்திகவாதம் நடத்தியதே இல்லை என்றால் — தமிழாசிரியர்களைப் பற்றியா ஐயம் எழுவது? நாட்டு மக்களின் நல்வாழ்வைக் கருதி, ஆலயங்களிலேயே சமயத்தின் பேரால், சாஸ்திரத்தின் ஆதாரங்களைக் கூறிக்கொண்டு நிகழும் அக்ரமங்களைக் கண்டிக்கிறோம் நாம்; அதுவா அநீதி!

ஆண்டவன் ஆறுபத்துத்தலையுடையான், பக்கத்துக்கொரு மனைவியுடையான், தலையிலே கூத்தியுடையான். பிள்ளை குட்டிப் பலவுடையான்— என்றெல்லாம் இயம்பிடும் கதைகளை நம்பச் செய்பவர்களும் நம்புகிறவர்களும் அல்லவா கடவுளை' நிந்திக்கும் கயவர். அதுமட்டுமா —தெய்வத்துக்குத் தமிழ் ஏற்காது, தேவ பாஷைதான் ஏற்கும், தேவர திருவாசகமும் திருவாய்மொழியும் பொருந்தாது, வழக்கிழந்தாலும் வடமொழிதான் பொருந்தும் என்று பேசி, தாமொரு குலத்தினர் மட்டும் சூதாகப் பிழைப்பு நடத்துவதற்கே இதுநாள்வரை திட்டமிடும் ஆரிய இனத்தவரல்லவா நாத்திகர். ஆண்டவன் பெயரால் சிலையைக் காட்டி, அதற்கென அணியும் ஆபரணமும், தேரும்,திருவிழாவும்,பொன்னும் பொருளும் என்று கேட்டுப் பெற்று—தம் வயிறு வளர்க்கும் கூட்டத்தினரல்லவா நாத்திக.

கடவுள் பெயர் சொல்லி ஏமாற்றுவது நாத்திகமா? 'கடவுள்' பெயரால் வழங்கும் கண்மூடிப்பழக்க வழக்கங்களைக் களைந்தெறிவது நாத்திகமா?

இந்த நாட்டில், அஜீரணத்தை' வளர்த்துக்கொள்ளும் வழி தேடிக்கொண்டவர்களுக்குப் பெயர்தான 'ஆஸ்திகர்' — 'பசிபோக்கிட' வழிகாணக் கேட்டிடும் ஏழைகளின் அன்பர்களின் பெயர்தான் நாத்திகர்' என்றால நாத்திகராவதே நல்லதென்பேன் நான்.

தமிழாசிரியர்கள், ஒழுக்கத்தை மறந்தவர்களல்ல. நேர்மையை வலியுறுத்தாதவர்களல்ல. கடமையைக் கைவிட்டவர்களல்ல. அவர்களைவிடப் பண்புடையாளர்களைக் காண்பதும் அரிதேயாம். என்றாலும் நாட்டின் நல்வாழ்விலே, அவர்கள் காட்டும் ஆர்வத்தைத்தான் தவறாக உணர்கிறார்கள, சிலர் அங்கிலை மாறும், மாற்றப்படும்- அயராத முயற்சித்தால் என்னும் கருத்துடையேன் நான்.

நேற்று முன்னாள்-பக்விநங்கல் என்னும் — உலகிலேயே மிகப் பெரியதொரு, நீர்த்தேக்கத்தைத் திறந்துவைத்த பண்டிதநேரு அவர்கள், பேசுகையில், பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்கான - இத்தகைய மாபெரும் திட்டத்தின் நிறைவேற்றத்தைக் காணும்போதுதான் - எனக்குச் சமய உணர்ச்சி தோன்றுகிறது என்று கூறினார். என்னபொருள் அங்கேதான். — ஆண்டவனைப் பற்றிய உணர்வு தோன்றுகிறது என்கிறார் அவர். ஆனால் அவரது அடியினைத்திக்கு நோக்கித் தெண்டனிடும் சிலரோ: இங்கே நம்மை கண்டிக்கின்றனர்.

உத்தமர் காந்தியடிகள் கூறினார்—தென்னாட்டுக் கோவில்கள் தாசிகளின் மடங்கள் என்று கவிஞர் தாகூர் கூறினார், ஏழையின் சிரிப்பிலேதான் இறைவன் இருக்கிறான் என்று. பாடுபடும் ஏழையின் இன்பவாழ்விற்கு வகைகாண்பதோ-அதை எடுத்துச்சொல்வதோ எப்படித் தவறாகும். வடலூர் வள்ளலார் கூறினார், 'சாதியிலே சமயங்களிலே சாத்திரச் சந்தடிகளிலே — சிக்கி உழல்கின்றோம் என்று'. எனவேதான்—இன்றைய தமிழாசிரியர்கள் ஆற்றும் பணி குறையுடையதல்ல என்று குறிப்பிடுவதோடு, அதை வளர வேண்டும் என்று விரும்புகிறேன் நான்

தொடர்ச்சி நாளை வரும்

தென்னாப்ரிக்கா தலைவர்கள் கைது

கேப்டவுன், ஜூலை 13—

பார்லிமெண்ட் மாஜி மெம்பர்களான பிரியன் பண்டிங்கையும், சாம்காணையும் கம்யூனிஸ்ட் ஒழிப்பு சட்டத்தின் கீழ் திடீரென கைது செய்து காவலில் வைக்கப் பட்டுள்ளனர், இவர்களை ஜாமீனில் விடும்படி செய்து கொண்ட மனுவின் பேரில நிபந்தனையுடன் விடுதலை செய்யப் பட்டனர்.

மேயருக்குப் பாராட்டு

சென்னை, ஜூலை 12—

சென்னை நகரமேயர் திரு. முனுசாமி பிள்ளையைப் பாராட்ட பெரம்பூர் திரு, வி, க. முதியோர் பாடசாலை சார்பில் நேற்று ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. கே. நடேசன் தலைமை வகித்தார். மேயருக்கு வாழ்த்துப் பத்திரமொன்று வாசித்தளிக்கப் பட்டது. தோழர்கள் அந்தோணிபிள்ளை கல்யாண சுந்தரம் பி. ஜகநாதம், எம். கே. பொன்னுசாமி தோழியர் கிருஷ்ணபாய் மேயரைப்பாராட்டி பேசினர். கூட்டத்தில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

வெட்டுப்படும் தமிழரின் காயங்களை கட்டுவோர் யார்?

போராட்டம், மக்களின் தியாக உணர்வை விரயமாக்கக் கூடாது

ஆவேசப் பேச்சும், தடியடிபடுதலுமே அறப்போர் ஆகுமா?

தொன்னைக்கு நெய் ஆதாரமா? காங்கிரசுக்கு சிவஞானம் ஆதாரமா?

சித்தூர் மாநாட்டில் அறிஞர் அண்ணா

(நேற்றையத் தொடர்ச்சி)

சித்தூர் தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்தினின்றும் விடுவிக்கும் பணியில் தி. மு. கழகத்தவர் பெரிதும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

ஆந்திர நாட்டினை நேரு அவர்கள் துவக்கி வைப்பதற்கும் முன்பே திருத்தணியில் நடந்த ரயில் நிறுத்த அறப் போராட்ட தில் தி. மு. கழகத் தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி திருத்தணி என். ஏ. ரஷீத் போன்றவர்கள் சித்தூர் தமிழ்ப் பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் சேர்த்திடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

திருத்தணியில் தோழர் என். ஏ. ரஷீத் அவர்களுடன் சில ஆந்திர நண்பர்கள் பேசுவதே இல்லையாம். புத்தூரில் ஆந்திரரும் தமிழரும் கைகலந்திடும் அளவுக்கு நிலைமை உண்டாகி விட்டதாம். ஏன் இத்தகைய மனமாச்சரியங்கள் ஏற்படவேண்டும்? தமிழரும் ஆந்திரரும் ஒருவருடன் மற்றவர் மோதிடுவதால் ஆகும் பயன் என்ன? இத்தகைய காரியங்களால்மட்டுமே சித்தூர் பிரச்சினை தீர்ந்துவிடுமா? தீர்த்திட முடியுமா? முடியாது.

சித்தூர் பகுதியில் உள்ள மக்களில் யார் தமிழர், யார் தெலுங்கர், எப்பகுதிகளில் தமிழர் அதிகம்—எவை தமிழருக்குச் சொந்தமானவை என்பவைகளைத் தீரவிசாரித்து கல்வெட்டுகளையும் கண்டறிந்து, தமிழ் ஆந்திர நண்பர்களுடன் நல்லபடி கலந்து பேசி, டெல்லி சர்க்காரைக் கலந்துதான் இப்பிரச்சினைக்குப் பரிகாரம் தேடவேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

கடந்த ஆண்டு நடந்த திருத்தணிப்போராட்டத்தின் போது நான், நண்பர்கள் கருணாநிதி விநயகம், அரங்கண்ணல் ஆகியோா திருத்தணிக்குச் சென்று நிலைமையை கவனித்து விட்டுத் திரும்பினோம், திரும்பும் போது வழியில் உள்ள கனகம்மா சத்திரம் என்ற இடத்தில் தங்கி ஒரு ஓட்டலுக்குள் சென்றோம். நான் அந்த ஓட்டல்கார அய்யரைப் பார்த்து ஏனய்யா, ஆந்திரம் பிரியப் போகிறதே, நீங்கள் தமிழ்நாட்டோடு சேரப்போகிறீர்களா? அல்லது தெலுங்கு நாட்டோடு சேரப்போகிறீர்களா? என்று கேட்டேன். அந்த அய்யர் 'நாங்கள் எல்லாம் தெலுங்கு நாட்டோடுதான் சேர்வோம்' என்று பதில் சொன்னார். அங்கே சிற்றுண்டியருந்திக் கொண்டிருந்த ஓர் நூல் வியாபாரி இதைக் கேட்டு அதெப்படி தெலுங்கு நாட்டுடன் சேர்வது? நாங்கள் தமிழ் நாட்டுடன்தான் சேர்வோம்,' என்று குறுக்கிட்டுப் பதில் சொன்னார்.

நான் அந்த அய்யரிடம் மறுபடியும் கூறினேன், 'நீங்கள் எல்லாம் சென்னைக்கு மிகவும் அருகில் இருக்கிறீர்கள். நீங்கள் தமிழ் நாட்டுடன் சேர்வதுதானே, நல்லது-நியாயம் என்று அய்யர் 'சென்னை தமிழ் நாட்டோடா சேர்கிறது? அப்போது நாங்களும் தமிழ் நாட்டுடன் சேரவேண்டியதுதான்! என்றார்.

ஓட்டல், பத்துப்பேர் வந்து போகும் இடமாயிற்றே. அப்படிப்பட்ட கருத்துக் கூடத்தில் கேட்டால் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது தெரியும் என்று நான் கேட்க, அப்படிப்பட்ட இடத்திலேயே இந்தப் புரியாத நிலைமை இருக்கக் கண்டேன்.

இப்படி விபரம் தெரியாத மக்கள் வாழும் பகுதியில் உள்ள மக்களின் மன நிலையை அறியவும், நமது இலட்சியத்தை மக்களிடையே விளக்கவுமே நான் இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது. ஆனால் ஆந்திர சர்க்காரோ இதைப் புரிந்து கொள்ளாமல் நாம் ஏதோ ஆந்திருடன் போரிடப் போா முகாம் அமைப்பதாக எண்ணிக்கொண்டு தங்கள் ஆயுதந் தாங்கிய போலீசாரை இங்கே அனுப்பி வைத்திருக்கின்றது. ஆந்திர சர்க்காரின் நிலை இப்படி!

தோழர் விநயகம் போன்றோர், சித்தூர் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டு உழைத்த கழகத் தோழர்களான கிருஷ்ணசாமி. ரஷீத் போன்றவர்களை தெலுங்கர் என்றே கூறி, ஆந்திரருக்குத் துணை போகிறார்கள் என்று குறை கூறி வருகிறார்கள்.

இப்படிக் கூறுவதைச் சற்று உரத்த குரலில், ஆந்திர நாட்டின் உட்பகுதிகளில் சென்று கூறினால்கூட நல்லது என்று எண்ணுகிறேன். இது ஆந்திரரின் காதுகளில் எட்டி ஆந்திர சர்க்காரின் கவனத்திற்கும் உரியதாகும். இதன் மூலம் ஆந்திரரிடம் மனமாச்சரியம் கொண்டு துவேஷ மூட்டுவதாகக் கருதப்படும் எண்ணம் நீங்கி திராவிட நாடு பற்றிய கருத்தைப் பரப்ப எங்களுக்குச் சுலபமாகுமே!

டில்லி சர்க்காருடன் போராடி எல்லைக் கமிஷனை விரைவில் ஏற்படுத்தச்செய்து, அதன்முன் தமிழரது உரிமைகளை எடுத்துக் கூறி, சித்தூர் தமிழ்ப் பகுதிகளை நாம் திரும்பப் பெற வேண்டும்.

எல்லைக் கமிஷன் அமைக்கப் படும் வரைஇடைககாலத்தில் சித்தூர் தமிழ்ப்பகுதிகள் முழுவதிலும் சுற்றி மக்களின் மன நிலையைத் தெரிந்துவரவேண்டும். தமிழரது உரிமைக்கான காரண காரியங்களை மேலும் சேகரிக்க வேண்டும். கல்வெட்டுகளைத் தோண்டறிய வேண்டும். தெலுங்கர் என்று பதியப்பட்டுள்ள தமிழர்களைத் தமிழர்கள் என்று உணர்த்த வேண்டும். இப்படிப் பட்ட ஆக்க வேலைகளில் நாம் ஈடுபட வேண்டுமே தவிர மற்றவரைப்போல் தமிழருக்கும் ஆந்திரருக்கும் இடையே மனமாச்சரியங்களைக் கிளப்பி. துவேஷ மூட்டுவதோ, குரோதங்களை வளர்ப்பதோ, மோதுதல்களை ஏற்படுத்துவதோ கூடாது, கூடவே கூடாது. அது அர்த்த மற்ற வேலை, பொருளற்ற செயல்.

நாங்கள் அரைடஜன் பேர் இங்கேவந்து, ஆவேசமாகப்பேசி ஆத்திரமூட்டிவிட்டு, நாளைக் காலையில் சென்று விடலாம். அது ஒன்றும் பெரிய காரியமல்ல முடியாததுமல்ல! ஆனால் இதன் விளைவால் தமிழரும் ஆந்திரரும் முட்டி, மோதிக்கொள்வதால் யாருக்கு என்ன இலாபம்? இங்கே அடி, உதை. குத்து, வெட்டுபடும் தமிழரின் காயங்களைக் கட்டுவோர் யார்? கண்ணீரைத் துடைப்போர் எவர்? ஆந்திர சர்க்கார் செய்யுமா? சென்னை வருமா? டெல்லிதான் கவலைப்படுமா, இது பற்றி? எவரும் வரமாட்டார்கள்.

இப்படிப்பட்ட குரோத எண்ணங்களை மூட்டுவதும், மனமாச்சரியங்களை ஏற்படுத்துவதும், துவேஷங்களை வளர்ப்பதும் தேவையற்ற செயல்கள் தான்.

வீணான போராட்டஎண்ணங்களை மக்களிடையே தூவிடுவது கூடாது. அர்த்தமற்ற வகையிலே அறப்போர் என்று பேசுவதும், தொடுப்பதும் கலைக்குதவாத காரியங்களே!

நான் இப்படிக் கூறுவதால் தி. மு. கழகம் போராட்டம் என்றால் பயந்து வருகிறது என்பதல்ல பொருள். தி. மு. கழகம், போரிடத் தயங்குகின்ற கழகமல்ல, ஏற்கனவே பல போர்க்களங்களைக் கண்டது தான். போரிடத் தெரிந்தது தான். கடந்த ஆண்டு நடந்த மும்முனைப் போராட்டத்தில் நாங்கள் காட்டிய ஆர்வமும், நெஞ்சுறுதியும், தியாகங்களும் கொஞ்சமல்ல — சாதாரண் மானவைகளுமல்ல என்பது நாடறிந்த செய்தியாகும்.

மும்முனைப் போராட்டத்திலே ஐயாயிரவர்கட்கு மேல் சிறைபுகுந்தனரே? பலநூறு பேர் படுகாயமடைந்தார்களே? ஆறுபேரைத் துப்பாக்கிக்குண்டுகட்குப் பலி கொடுத்தோமே? நாங்கள் எப்படிப் போராட்டத்தைக் கண்டு பயப்படுவோம்?

நாங்கள் போராட்ட பரம்பரையைச் சேர்ந்தவர்கள்—போர்க்களம் பல கண்டவர்கள்-போர்த்திறம் படைத்தவர்கள் என்றாலும் பொறுப்பற்றதன்மையிலே போரில் இறங்க மாட்டோம்—போரினை மூட்டிடவு மாட்டோம் காரணகாரியங்களை ஆய்ந்து அறிந்து, நிலைமைகளை நன்கு தெரிந்து — புரிந்து தேவையான நேரத்தில் தான் நாங்கள் போர்ப்பரணி பாடுவோம்—போரிடுவோம்-வெற்றி காண்போம்.

தோழர் சிவஞானம் பொறுப்பற்ற முறையிலே, சித்தூர் பகுதிகளில் அறப்போர் என்று பேசி ஆந்திர — தமிழ் நண்பர்களிடையே துவேஷமூட்டிவிடுவதும் எனது போர் நேருவுடன் அல்ல, காமராஜருடனும் அல்ல, பிரகாசத்துடன் என்று அறிவிப்பதும் நன்மைதரும் பேச்சல்ல, மாறாகத் தீமைதான் தரும் — விளைவிக்கும் என்பது உறுதி.

நாம் நேருவைக்கேட்டு அவர் மறுத்தால் அவருடன் அறப்போர் தொடுக்கவேண்டும். அதில் காமராஜர்குறுக்கிட்டால் அதனையும் சமாளிக்கவேண்டும் இதன் பின்னர்தானே பிரகாசத்திடம் செல்லவேண்டும்? அதைவிட்டு எடுத்த எடுப்பில் பிரகாசத்துடன் போர் என்பது எப்படிப்பொறுப்புள்ள பேச்சாகும்? செயலாகும்?

சித்தூர் பிரச்சினையைத் தீர்க்க தி. மு. கழகம் பொறுப்புணர்ந்துபேசுகிறது — காரியமாற்றுகிறது. டில்லியுடன் போராடி எல்லைக்கமிஷன் முன் தமிழரது உரிமையை நிலைநாட்டி வெற்றிகாண்பதுதான் அதன் திட்டம். இதற்கெல்லாம் பரிகாரம் காணகுறைந்தது ஒரு வருடமாவது அவகாசம் வேண்டும், அதற்குள் சித்தூர் தமிழ்ப்பகுதிகளில் தோழர் என். வி. நடராசன் தலைமையில் கிருஷ்ணசாமி போன்ற தோழர்களைக்கொண்டு

4-ம் பக்கம் பார்க்க

Regd. No 5458

வெட்டுப்படும் தமிழர்கள்..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தி மு. க, அமைத்துள்ள இணைப்புக் கமிட்டி, சுற்றி, மக்களைக் கலந்து வேண்டிய காரியங்களைக் கவனிக்கும்—செய்யும்.

பொறுப்பறிந்து நடப்பவர்கள் காரியமாற்றுபவர்கள் செய்யும் செயல்தான் இது. தோட்டத்தின் உள்ளே, வேலிக்கப்பால் இருக்கும் மாமரத்திலுள்ள மாங்கனியைப் பறிக்க பொறுப்புள்ள பெரியவர்கள் தொறடுபோட்டு பறிப்பார்கள். ஆனல் பொறுப்பற்ற சிறுவர்கள் கல்லெறிவார்கள்! மாங்கனி விழுந்தால் விழட்டும், அல்லது கல் யார் தலையிலாவது விழுந்தாலும் விழட்டும் என்று. அதைப்பற்றி சிறுவர்கள் கவலைப்படுவார்களா? அதுபோலத்தானே சிவஞானம் அறப்போர் என்று பொறுப்பற்ற முறையிலே பேசுகிருர்!

மாங்கனி விழுந்தால் விழட்டும். இல்லையேல் யார் தலையிலாவது கல்விழட்டுமே என்று பொறுப்பற்றுக் கல் வீசிடும் சிறுவனைப் போன்று தி. மு. கழகம் செயலாற்ருது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்து விடுகிறேன்.

பண்டாரம் எந்தத் திண்ணையில் வேண்டுமானுலும் படுத்துத் தூங்குவான் — எப்போது வேண்டுமானுலும் தூங்குவான். பரதேசி எந்த உணவையும் சாப்பிடுவான், எப்போது வேண்டுமானுலும் சாப்பிடுவான். பாதுஷாவிற்கு விருந்து எங்கும் கிடைக்கும், எப்போது வேண்டுமானுலும் கிடைக்கும். ஆனல் குடும்பம் என்று பொறுப்புடன் வாழ்வோர் அப்படியிருக்க முடியுமா? முடியாது'. அவர்கட்குத் தனிபொறுப்பும், வாழ்க்கைவழி, வகைகளும் நெறி, முறைகளும் இருக்கத்தானே இருக்கின்றன?

தோழர் சிவஞானம் பண்டாரம் போன்றவராகவோ பரதேசியைப் போன்றவராகவோ இருப்பதாகக் கூறுவது அவருக்குக் கேலியாகத் தோன்றலாம். அவர் பாதுஷாவைப் போன்றவர் என்று கூறலாமே!

தோழர் சிவஞானம் தமது போக்கை மாற்றிப் பொறுப்பறிந்து மக்களிடம் பேச வேண்டும்—தூண்டவும் வேண்டும். இன்று அவர் தூண்டிவிடுவதன் பலனுக சித்தூர் பகுதியில் ஆந்திரரும் தமிழரும் அடி, உதை—குத்து வெட்டு என்று இரத்தக் களரியில் இறங்கி விட்டால் நான் முன்னரே குறிப்பிட்டபடி சிவஞானம் வருவரா? காயங்களைக் கட்ட கண்ணீரைத் துடைக்க? அதனல் மட்டும் சித்தூர் பிரிந்து விடாது.

நமது போர் பொறுப்பறிந்து நடத்தப்பட வேண்டுமே தவிர. வேலையற்ற இடத்தில் வீண் போராட்டங்களைத் தூண்டிவிட்டு மக்களின் தியாக உணர்வை வீணுக விரயமாக்கக் கூடாது.

அறப்போர் என்பதும், தியாக புத்தி என்பதும், ஆவேசமாகப் பேசுவதும், தடியடி பட்டுச் சாவது மட்டுமே அல்ல. நமது போராட்டத்தின் பயனுக—தியாகத்தின் பலனுக உடனடிப் பிரச்சினை தீர வழி. வகை இருக்க வேண்டும். ஏற்பட வேண்டும். இன்றேல் நாம் பொறுப்பற்றுப் போர் செய்தவர்களாவோம்! அர்த்தமற்றுத் தியாகத்தீயில் குதித்துப் புண்பட்டவர்களாவோம்.

ஆந்திர மாகாணத்தைப் பிரித்திட வேண்டும் என்று பொட்டி சிராமுலு தன் வாழ்வையே தியாகம் செய்தார். அதனல் தக்க பலன் ஏற்பட்டதே? தியாகம் செய்வது-அதற்கு ஏற்படும் பலனைப் பொறுத்தே பொறுப் பறிந்து செய்யப்படட வேண்டும்—அதைவிட பொறுப் பறிந்து தூண்ட வேண்டும்.

திருவாங்கூரிலிருந்து நாஞ்சில் தமிழ்ப் பகுதிகளைப் பிரித்து. தமிழகத்துடன் இணைப்பதற்கான அறப்போர் இப்போது அங்கே நடைபெற்று வருகிறது. அதனைத் திருவாங்கூர் தமிழ்க் காங்கிரஸ்தான் நடத்துகிறது என்ருலும், சென்னைக் காங்கிரசும், டில்லி தலைமைப் பீடமும் ஆதரித்தனரா? இல்லை! மாருக சென்னைக் காங்கிரஸ் தங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை யென்றுதானே அறிக்கை விட்டுள்ளனர்? இந்த நிலைதானே சித்தூர் பிரச்சினையிலும் ஏற்படும் அப்போது சிவஞானம் என்ன செய்வார்?

காங்கிரஸ்காரன் என்று கூறிக்கொள்ளும் ம. பொ சி. பாடே இன்று ஆபத்தான நிலையில் இருக்கிறதே? நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா என்பது போல இன்று சிவஞானத்திற்கு காங்கிரஸ் ஆதாரமா? காங்கிரசுக்கு சிவஞானம் ஆதாரமா? என கேள்வி கிளம்பியுள்ளதே!

இந்த நிலையில, காங்கிரசின் பக்க பலத்தையும், அதன் மூலம், சென்னை, டெல்லி சர்க்கார் உதவியையும பெறமுடியாதே? இப்படிப்பட்ட நிலையில் அவர் ஏன் தகாதவழிகளில் மக்களைச் செலுத்த முற்பட வேண்டும்?

சந்தைகளிலும், சாயந்திர வேளைகளில் நாற்சந்திகளிலும் சிறுகடை வைத்து நின்று கொண்டே 'போனல் வராது, பொழுதுபோனல் தங்காது', என்று கூவிக்கூவி எதையாவது விற்று, கிடைத்த காசை மேலங்கியில் முடிந்து தோளில் போட்டுச் செல்லும் வியாபாரியைப் போல சிவஞானம் பேசுவது நடப்பது நல்லதல்ல!

நாங்கள் சிவஞானம் போன்ற சந்தைக்கடைக்காரர்களல்ல. நாங்கள் நிலையாக—உட்கார்ந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளைப் போன்றவர்கள். என்றைக்கும் பொறுப் புணர்ந்து நடப்பவர்கள். நிலைப்பவர்கள் என்பதை மக்கள் உணரவேண்டும்.

நமது ஜோபியில் இருக்கும் ஐந்து ரூபாயை எடுத்து முருகேசன், கந்தசாமியிடம் கொடுத்து விட்டால் நாம் முருகேசனை விட்டு விட்டு, கந்தசாமியிடம் மல்லுக்கு நிற்பது நியாயமா? கந்தசாமியைத் திருடன் என்று பழிப்பதுதான் தகுமா? அப்படிப் பழித்தால் கந்தசாமி சும்மா இருப்பானு? விடுவானு? இதைப் போலத் தானே, நமக்குரிய சித்தூர் தமிழ்ப் பகுதிகளை டெல்லி சர்க்கார், ஆந்திர சர்க்காரிடம் கொடுத்து விட்டதற்காக டெல்லியை விட்டு ஆந்திரத்துடன் மோதுவது? வேறென்ன?

எனவேதான் நான் சித்தூர் பிரச்சினையில் நல்லதொரு முடிவு காணக்குறைந்ததுஒருவருடகாலமாவது தேவைப்படும் என்று குறிப்பிட்டேன்.

இந்த இடைக்காலத்தில் சித்தூர் மக்களிடையே தி. மு. கழகத்தின் இணைப்புக் குழு சுற்றி, ஆந்திர தமிழ் நண்பர்களிடையே கலந்து பேசிஎல்லைக் கமிஷன் ஏற்படுத்தச் செய்து, அதன் முன்னர் தமிழரது உரிமையை நிலைநாட்டி வெற்றி காணும் — காணமுடியும் என்று நம்புகிறேன். இதற்கான ஆக்க வேலைகளில்தான் கழகத்தோழர்களும், நண்பர்களும் ஈடுபடவேண்டும்.

இந்த நேரத்தில் ஆந்திர நண்பர்கட்கும் ஒன்று கூற விரும்புகிறேன், ஆந்திர நண்பர்கள் சித்தூர் தமிழ்ப் பகுதிகள் இருந்தால்தான் ஆந்திரம் எழிலோடு விளங்கும் என்று தப்புக் கணக்குபோட வேண்டியதில்லை. நியாயமற்ற பகுதிகளை அவர்கள் விரும்புவதை விட்டு அவர்கட்கு உரியதான ஐதராபாத் தெலுங்குப் பகுதிகளை டெல்லியுடன் போராடிப் பெறவேண்டும். நேருவும்—நிஜாமும் செய்துள்ள ஒப்பந்தத்தை உடைத்தெறிந்து, நிஜாமிடமுள்ள தெலுங்குப் பகுதிகளை மீட்டு விசால ஆந்திரம் அமைப்பதே அவர்கள் நோக்கமாக இருக்கவேண்டும் இந்த முயற்சியில் தி. மு. கழகம் என்றென்றும் அவர்களுக்குப் பக்கத் துணைநின்று, போராடி, வெற்றிபெற்றுத் தரும் என்று உறுதிகூறுகிறேன்.

ஆந்திரர்களை பத்ராஜலம் அழைக்கிறது. விசாலஆந்திரம் வரவேற்றுக் காத்திருக்கின்றது, அவர்கள் அத்திக்குநோக்கட்டும், சித்தூர் தமிழ்ப் பகுதிகளைத் தமிழரிடம் விட்டுவிட்டு என்றுதான் ஆந்திர நண்பர்களிடம் நான் கூறுகிறேன், அப்போதுதான் அவர்கள் கேட்ட, மொழி, வழி மாகாணம் என்ற எண்ணம் ஈடேறும், அமைப்பும் பூர்த்தியாகும்—நிலைக்கவும் நிலைக்கும்.

நான் ஆந்திர முதல்வர் பிரகாசம் அவர்களைச் சந்தித்தது கிடையாது. தோழர் தென்னேட்டி விஸ்வநாதம் அவர்களை மட்டும் எனக்குத் தெரியும். அடுத்து அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்போது நிலைமைகளை நன்குவிளக்கி, நல்ல முடிவு காண என்னுலானதைச் செய்ய முயற்சிக்கிறேன்.

சித்தூர் மாவட்டத் தோழர்களே! பொறுப்புடன் நடந்து காட்டுங்கள். பொறுப்பற்ற பேச்சுகட்குச் செவிசாய்த்து ஆந்திர—தமிழர் மோதுதல்களை ஏற்படுத்த வேண்டாம், அர்த்தமற்ற காரியங்களுக்காக, யாரோ எதற்கோ தூண்டிவிடும்கிளர்ச்சிகளில் கலந்துகொள்ளாதீர்கள். நீங்கள் நிலைமையைப் புரிந்துகொண்டால்அதன்படிநடந்தால் பொறுப்பற்ற பேச்சாளிகளும். அர்த்தமற்ற அறப்போர் வீரர்களும் உம்மை அண்டவே மாட்டார்கள்.

இறுதியாக தி. மு. கழகம் சித்தூர் பிரச்சினையைத் தீர்க்க தனது இணைப்புக்குழு மூலம் உடன் தக்க செயலாற்றுமென்றும், டெல்லியுடன்போராடியே தீரும் என்பதையும் கூறி, இந்த மாநாடுகளைக் கூட்டிய தோழர்களுக்கு மீண்டும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன், வணக்கம்,

வெடித்தது காண் எரிமலை—பொங்கி
வழியுது காண்—வீரக்கனல்!

* பூத்து வரும் புரட்சி எத்தகையது என்பதை பழுதுபட்ட பார்வையினரும் தெரிந்து கொள்ளச் செய்த ஜூலை—15

* மும்முனைப் போராட்டம் முழு உருவெடுத்து, சர்க்காரைத் திணற அடித்து, மாற்றுக் கட்சிக்காரர்களையும் நம்முடன் உறவாடவைத்த—ஜூலை—15.

* ஆணவ அரசு அழிந்து படும் என்பதனைச் சொல்லாமல் சொல்லி, அறப்போர் வெல்லும் என்பதனை எடுத்துக் காட்டிய மகத்தான நாள்—ஜூலை—15.

* துக்கத் தாய் ஈன்றெடுத்த வெற்றிச் சேய்—ஜூலை—15

திருவிடத்தவருக்கு அறிஞர் அண்ணு தரும்
அன்புப்படையல்.

ஜூலை - 15

இருவர்ண முகப்பு :: விலை அணு 4.

விவரங்களுக்கு:

"மாலை மணி" பதிப்பகம்

2/45, முத்துமாரிச் செட்டித் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

திருமதி, எம் ராஜம் அவர்களுக்குச் சொந்தமான பெர்கண்டையல் அச்சகத்தில் திரு டி. பி சுப்ரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2/45, முத்துமாரிச் செட்டி தெரு சென்னையில் வெளியிடப்பட்டது.